**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 278 / 2019**

**பி.வா.சா.1 – முத்துப்பாண்டி 03.06.2026**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

எனது அப்பா வெள்ளைச்சாமிக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். அதில் முதல் மனைவிக்கு பிறந்தவர்கள் தான் நானும் 4ம் பிரதிவாதி முத்துலெட்சுமியும் என்றால் சரிதான். இரண்டாவது மனைவிக்கு பிறந்தவர்கள் தான் பாலமுருகன், பாண்டியம்மாள் என்றால் சரிதான். பாண்டியம்மாளின் வாரிசுகள் தான் 6, 8, 9, 10 பிரதிவாதிகள் என்றால் சரிதான். எனது அப்பாவின் உடன்பிறந்தவர்கள் 5 நபர்கள் அவர்கள் கருப்பணன், வெள்ளைச்சாமி, பாண்டி, முனியாண்டி, மலைராஜ் ஆகியோர் ஆவார்கள். மலைராஜ் என்பவருக்கு கருப்பையா என இன்னொரு பெயர் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மலைராஜ் என்பவரின் மனைவி பெயர் எனக்கு தெரியாது. மலைராஜ்ஜும், கருப்பையாவும் ஒரே நபர் தான் அவரது மனைவி தான் 1ம் வாதி அமுதாராணி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கருப்பையாவுக்கும் 1ம் வாதிக்கும் பிறந்தவர் தான் 2ம் வாதி சசிக்கலா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மலைராஜின் வாரிசுகள் தான் வாதிகள் என்று தெரிந்திருந்தும் வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல,

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை